# சேவாபாரதி தமிழ்நாடு

(பதிவு எண் 511/99)




# மாநில பொதுக்குழு கூட்டம்

# ஆண்டறிக்கை 2017-18

# சேவாபாரதி தமிழ்நாடு மூலம் நடைபெற்று வரும் சேவைப் பணிகள் விவரம்

## கல்விப் பணிகள்

| | | |
|---|---|---|
| கல்வி தான மையங்கள் | - | 141 |
| ஹிந்தி பயிற்சி மையங்கள் | - | 2 |
| பண்பாட்டு வகுப்புகள் | - | 175 |
| மொத்தம் | - | 318 |

## சுயசார்பு பணிகள்

| | | |
|---|---|---|
| தையற் பயிற்சி மையங்கள் | - | 12 |
| கணினி பயிற்சி மையங்கள் | - | 5 |
| சுய உதவிக் குழுக்கள் | - | 24 |
| மொத்தம் | - | 41 |

## ஆரோக்கிய பணிகள்

| | | |
|---|---|---|
| ஹோமியோபதி முதலுதவி மையங்கள் | - | 49 |
| யோகா பயிற்சி மையங்கள் | - | 64 |
| நியூரோதெரபி மையங்கள் | - | 4 |
| அக்கு பஞ்சர் | - | 2 |
| ரத்த வங்கி | - | 1 |
| அவசர சிகிச்சை வாகனம் | - | 1 |
| மருத்துவ சேவை | - | 24 |
| மொத்தம் | - | 145 |

## சமுதாய நலப் பணிகள்

| | | |
|---|---|---|
| அன்பு இல்லங்கள் | - | 4 |
| நடமாடும் நூலகங்கள் | - | 26 |
| மஹிளா மண்டலிகள் | - | 2 |
| சிறார் சேமிப்பு குழுக்கள் | - | 9 |
| பிற சேவா காரியங்கள் | - | 100 |
| மொத்தம் | - | 141 |

**மொத்தம்-645**

(2018 ஜனவரி மாத புள்ளி விவரப்படி)


# சேவாபாரதி தமிழ்நாடு

பதிவு எண் 511/99

## மாநில பொதுக்குழு கூட்டம்

## 2018 ஜூலை 14, 15

'சேவா', இரண்டாவது தளம்,
79, டாக்டர் அழகப்பா ரோடு,
புரசைவாக்கம், சென்னை - 600 084.
தொலைபேசி: 044 - 2642 4076 / 944 577 8373
e.mail: sbtn9999@gmail.com
website: sevabharathitn.org



இறைவா, நான் மோட்சத்தைக் கேட்கவில்லை மற்றவர் கேட்கும் எதையும் நான் கேட்கவில்லை. நான் நேசிக்கும் இந்த மக்களுக்காக வாழ்ந்து பணிபுரிய என் வாழ்க்கையை அர்ப்பணிக்க ஓர் சந்தர்ப்பம் மட்டுமே கேட்கிறேன்.

- மகரிஷி அரவிந்தர்

# சேவாபாரதி தமிழ்நாடு

## மாநில பொதுக்குழு கூட்டம்

**ஸ்ரீ வாசவி கல்யாண மஹால், மத்திகிரி, ஒசூர்**
2018 ஜூலை 14,15 சனி, ஞாயிறு

அன்புடையீர் வணக்கம்,

சேவாபாரதி தமிழ்நாடு அறக்கட்டளையின் பொதுக்குழு கூட்டத்திற்கு வருகை புரிந்திருக்கும் அனைவரையும் வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

2017-18 ஆண்டிற்கான ஆண்டறிக்கையை நாங்கள் உங்கள் முன் சமர்ப்பிக்கிறோம்.

கடந்த ஆண்டு நம் அனைவரின் கடும் முயற்சியால் சேவைப் பணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். அதைப் போல முகாம்களில் கலந்துக் கொண்டவர்களின் எண்ணிக்கையையும் அதிகரித்துள்ளது.

இந்தாண்டு சேவைப் பணிகள் குறித்த பல புகைப்படங்களும், செய்திகளும் தலைமை அலுவலகத்தில் குவிந்துவிட்டன. ஆண்டறிக்கையில் இடம் பற்றாக்குறை காரணமாக எல்லா செய்திகளையும் பிரசுரிக்க முடியவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பரந்த மனப்பான்மையுடைய நன்கொடையாளர்களின் ஆதரவுக்கும் இந்த தேசிய சேவைப்பணி வளர ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் பெரியோர்களுக்கும் இத்தருணத்தில் சேவாபாரதி தமிழ்நாடு அறக்கட்டளையின் சார்பாக வணக்கத்தையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நகரப் பகுதி முதல் குக்கிராமங்கள் வரை இத் தொண்டுப்பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் அனைத்து கார்யகர்த்தர்களுக்கும் நமது பாராட்டுதல்களுக்கு உரியவர்கள்.

அன்புடன்
தேசியப் பணியில்
**R.K. லீலா கிருஷ்ணன்**
மாநிலப் பொதுச்செயலாளர்

# ஆண்டறிக்கை 2017-2018

'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்ற சுவாமி விவேகானந்தரின் உரைக்கு ஏற்ப சேவாபாரதி தமிழ்நாடு' கடந்த 19 ஆண்டுகளாக 'பஞ்சகார்யா' கல்வி, சுயசார்பு, சமுதாய நலன், மருத்துவம், பேரிடர் நிவாரணம் என்னும் ஐந்து துறைகளின் வாயிலாக பல்வேறு சேவைத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அடித்தட்டு மக்களுக்கு தன்னம்பிக்கையூட்டி அவர்களது வாழ்வில் நம்பிக்கை ஒளியை ஏற்படுத்தி, தேசிய சிந்தனையை உருவாக்கும் பணியில் சேவாபாரதி தமிழ்நாடு செயல்பட்டு வருகிறது என்பதில் பெருமிதம் கொள்கிறோம்.

## மாநில பொதுக்குழு கூட்டம்

சேவாபாரதி தமிழ்நாடு அறக்கட்டளையின் 2017ஆம் ஆண்டு மாநில பொதுக்குழு கூட்டம் ஜூலை 15 & 16 தேதிகளில் சென்னை தாம்பரம் ஸ்ரீ சங்கர வித்யாலயா மெட்ரிக்குலேசன் பள்ளியில் நடைபெற்றது. ஆர்.எஸ்.எஸ் மாநில செயலாளர் திரு.S.சாம்பமூர்த்தி, க்ஷேத்ர சேவா பிரமுக் திரு.பத்மகுமார், திரு. சுந்தர லட்சுமணன், திரு. ராமகிருஷ்ண பிரசாத், சேவாபாரதி மாநில தலைவர் திரு B.ரபு மனோகர், மாநில பொது செயலாளர் திரு R.K லீலாகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர். கடந்த ஆண்டு நடைபெற்ற சேவைப் பணிகளின் மூலம் சமுதாயத்தில் ஏற்பட்ட தாக்கத்தை பொதுக்குழுவில் கலந்து கொண்டோர் தெரிவித்தனர். வரக்கூடிய ஆண்டு செய்ய வேண்டிய பணிகள் பற்றியும் ஆலோசிக்கப்பட்டன. பொறுப்பு வாரியாகவும், துறை வாரியாகவும் தனித்தனியாக சந்திப்புகள் நடைபெற்றன.



# கல்விப் பணி

## இலவச கல்வி தான மையங்கள்

இலவச கல்வி தான மையங்கள் என்பது பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கிய பகுதி மக்களின் கல்வி தரத்தை உயர்த்துவதற்காக கிராமங்கள், குடிசை பகுதிகளில் தினசரி நடைபெற்றுவரும் ஒரு பணியாகும். வாரம் ஆறு நாட்கள் தினசரி இரண்டு மணி நேரம் திறமை வாய்ந்த தன்னார்வலர்களைக் கொண்டு இந்த கல்வி தான மையங்கள் இயங்கி வருகின்றன.



தமிழகத்தில் சென்னை, திருவள்ளூர், வேலூர், ஆம்பூர், கிருஷ்ணகிரி, சேலம், ஆத்தூர், கடலூர், வந்தவாசி ஆகிய மாவட்டங்களில் அரசு பள்ளியில் படிக்கும் மாணவ, மாணவியர்களுக்காக 150 இடங் களில் 200 ஆசிரியர், ஆசிரியைகளைக் கொண்டு இந்த மையங்கள் செயல்பட்டு வருகின்றன.



எடமணி கிராமம்

## சமுதாயத்தில் தாக்கம்

பழவேற்காடு தோணிரேவு ஸ்ரீ கிருஷ்ணா கல்விதான மையத்தில் படித்துவரும் செல்வி. மோனிகா என்ற மாணவி கடந்த பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் 461 மதிப்பெண்களும், செல்வி. லாவண்யா என்ற மாணவி 458 மதிப்பெண்களும் பெற்றுள்ளனர். எடமணி பாரதமாதா கல்விதான மையத்தில் படித்துவரும் செல்வி. சர்மிளா என்ற மாணவி 416 மதிப்பெண்கள் பெற்றுள்ளார்.



திருவொற்றியூர் சிவராம்ஜி சேவா மைய கல்விதான மையத்தில் பயிலும் செல்வன். முருகானந்தம் 4ஆம் வகுப்பு, செல்வன். சர்ஷத்குமார் 5ஆம் வகுப்பு, செல்வன். சரத்குமார் 7ஆம் வகுப்பு மாண வர்கள் முதல் மதிப்பெண் பெற்றதற்கான சான்றிதழ்களையும், சிறந்த மாணவர் களுக்கான விருதுகளையும் பெற்றனர்.

# ஆசிரியர், ஆசிரியைகளுக்கு மாதாந்திர பயிற்சி வகுப்பு

ஆசிரியர், ஆசிரியைகளின் திறமையை அதிகரிக்க மாவட்டந்தோறும் மாதம் ஒரு முறை பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இதில் எளிமையாக கற்றுக்கொடுத்தல், விளையாட்டு, பாடல் பயிற்சி, மாணவ மாணவிகள், பெற்றோர்களிடம் அணுகவேண்டிய முறை கற்றுக் கொடுக்கப்படுகின்றன.



***சென்னையில் பிப்ரவரி 4 ஆம் தேதி நடைபெற்ற பயிற்சி வகுப்பு. மாநில துணை தலைவர் திரு.K.வேதகிரி, மாநில பொதுச் செயலாளர் திரு. R.K.லீலாகிருஷ்ணன் ஆகியோர் கலந்துக்கொண்டு பயிற்சி அளித்தனர்.***

***சிதம்பரத்தில் நடைபெற்ற மாதாந்திர பயிற்சி வகுப்பில் மாவட்ட செயலாளர் திரு.வேல்முருகன், அமைப்பாளர் திரு.சந்திரசேகர் கலந்துக் கொண்டு பயிற்சி அளித்தனர்.***





*ஆத்தூரில் டிசம்பர் 4 ஆம் தேதி நடைபெற்ற பயிற்சி வகுப்பில் மாநில அமைப்புச் செயலாளர் திரு. கா. சீனிவாசன் கலந்துகொண்டு பயிற்சி அளித்தார்.*

# பண்பாட்டு வகுப்புகள்

சேவாபாரதி தமிழ்நாடு மாணவ மாண விகளுக்கு கல்வி கற்று கொடுப்பதுடன் மட்டும் நின்றுவிடுவதில்லை. அவர்க ளுக்கு நம் நாட்டின் பண்பாடு, கலாச்சாரம், நல்லொழுக்கங்களையும் கற்று கொடுப்ப தற்கும் ஏற்பாடு உள்ளது. வாரம் ஒரு முறை பண்பாட்டு வகுப்புகளை சேவாபாரதி நடத்தி வருகிறது. நம் நாட்டின் புராதானமான வரலாறு, தேச பக்தி, தெய்வ பக்தி பாடல்கள், கதைகள், யோகா போன்ற விஷயங்கள் அந்த பண்பாட்டு வகுப்பில் கற்பிக்கப்படுகின்றன. இந்த வகுப்புகள் மாணவ மாணவிகள் மத்தி யில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றன.

கல்வி தான மையங்கள் நடைபெறும் அனைத்து இடங்களிலும் மற்றும் பல புதிய இடங்களிலும் இந்த பண்பாட்டு வகுப்புகள் நடைபெற்று வருகின்றன்.

## கோடைக்கால பண்பாட்டு வகுப்பு









இதை தவிர கோடை விடுமுறையில் விசேஷ முயற்சியாக பத்து நாட்கள் கோடைக்கால பண்பாட்டு வகுப்பு நடத்தி வருகிறோம். கடந்த மே மாதத்தில் 188 இடங்களில் இந்த பண்பாட்டு வகுப்புகள் நடைபெற்றன. மொத்தம் 3,191 சிறுவர், சிறுமிகள் பங்குகொண்டனர்.

- சென்னை விருகம்பாக்கம் கடம்பாடி அம்மன் கோயிலில் நடைபெற்ற பண்பாட்டு வகுப்பு.
- சென்னை அயனாவரம் பகுதி கல்விதான மையத்தில் நடைபெற்ற பண்பாட்டு வகுப்பு.
- பண்ருட்டியில் நடைபெற்ற கோடைக்கால பண்பாட்டு வகுப்பு.
- காஞ்சிபுரத்தில் நடைபெற்ற கோடைக்கால பண்பாட்டு வகுப்பு.

# ஆண்டு விழா



சேவை நடைபெறும் எல்லா இடங்களிலும் ஆண்டு விழா கொண்டாடப்படுவது வழக்கம். ஆண்டு விழாவில் அந்த பகுதியைச் சேர்ந்த பெரியவர்கள், பெற்றோர்களை அழைத்து மாணவ மாணவிகள் திறமையை வெளிப்படுத்துவது இதன் நோக்கம்.




சென்னை பெரியசேக்காடு கல்வி தான மையத்தின் ஆண்டுவிழா பிப்ரவரி 10ஆம் தேதி மணலி விவேகானந்தா மேல் நிலைப் பள்ளியில் நடைபெற்றது. விழாவில் ஆர்.எஸ்.எஸ்ஸின் பிராந்த கோ சேவா பிரமுக் திரு. கல்யாண் சிங் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

திருவொற்றியூர் மாவட்டம், சத்திய மூர்த்தி நகர் சிவராம்ஜி சேவை மையத்தின் மூன்றாம் ஆண்டு விழாவில் சேவாபாரதியின் மாநில பொதுச் செயலாளர் திரு. R.K.லீலாகிருஷ்ணன், சத்தியமூர்த்தி நகர் தலைவர் திரு.ராஜி கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



பண்ருட்டி திருவதிகை செட்டி பட்டறை கல்வி தான மையத்தில் நடைபெற்ற டாக்டர் அம்பேத்கர் ஜெயந்தி மற்றும் ஆண்டு விழா.

# நம்பிக்கை நட்சத்திரம்




மாணவ மாணவிகளுக்கான தேர்வு குறித்த பயத்தை போக்கும் வகையில், மன அழுத்தத்தை குறைக்கவும் நம்பிக்கை நட்சத்திரம் நிகழ்ச்சி சேவாபாரதி தமிழ்நாடு சார்பாக நடத்தப்படுகிறது. இதில் மாணவ மாணவிகளுக்கு நம்பிக்கையை உண்டாக்கும் சொற்பொழிவுகள், யோகா ஆகியவை கற்றுக் கொடுக்கப்படுகின்றன. மாணவ மாணவிகள் மத்தியில் இது பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.




தாம்பரத்தில் நடைபெற்ற நம்பிக்கை நட்சத்திரம் நிகழ்ச்சியில் ஆர்.எஸ்.எஸ்ஸின் மக்கள் தொடர்பு பொறுப்பாளர் திரு. பிரகாஷ், சேவாபாரதி தமிழ்நாடு சென்னை மாநகர் பொருளாளர் திரு. சங்கர் ஆகியோர் கலந்துக்கொண்டு வழிகாட்டினார்கள்.

ஒசூர் சேவாபாரதி ஸ்ரீ நிவேதிதா சேவா அறக்கட்டளை சார்பாக நடைபெற்ற 'தேர்(வு) திருவிழா' நிகழ்ச்சி. இந்த நிகழ்ச்சியில் அரசு பள்ளியில் பயிலும் பின் தங்கிய பகுதியை சேர்ந்த மாணவ மாணவிகள் 78 பேர் கலந்துகொண்டனர்.



# பழவேற்காடு மையத்தை பார்வையிட்டு வியந்த சென்னை பெரியவர்கள்

பழவேற்காடு பகுதிகளில் நடைபெற்றுவரும் சேவை பணிகளை சென்னையில் வசிக்கும் சில பெரியவர்கள் 3.12.2017 அன்று பார்வையிட்டனர். கல்வி தான மையம் நடத்தி வரும் ஆசிரியர், ஆசிரியைகள், கல்வி தான மையத்தின் ஐவர் குழுவைச் சேர்ந்த மாணவ, மாணவிகளுடன் அந்த சந்திப்பு நிகழ்ந்தது. அந்த மாணவ, மாணவிகளின் தெய்வப் பக்தி, தேசப் பக்தி பாடல்கள், கதை சொன்ன விதம் வந்திருந்த பெரியவர்களுக்கு பெரும் ஆச்சரியத்தை அளித்தது. அதில் ஒருவர் கூறியது "எங்கள் வீட்டு குழந்தையையும் இதில் சேர்க்கலாமா என்று யோசிக்கிறேன்" அந்த அளவுக்கு ஐவர் குழு மாணவ, மாணவிகள் பண்பாட்டு விஷயங்களில் திறமை மேம்பட்டு இருந்தது.



அடுத்து ஆசிரியைகள் தங்கள் அனுபவங்களை கூறினார்கள். ஒரு ஆசிரியை தன்னுடைய கல்வி தான மையத்தில் கடந்த 2017ஆம் ஆண்டு 10ஆம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு இரவு, பகலாக டியூஷன் எடுத்து அதன் மூலம் பல மாணவ, மாணவிகள் நல்ல மதிப்பெண்கள் எடுத்த விஷயத்தை கூறியது அனைவருக்கும் மகிழ்ச்சியை அளித்தது. பண்பாட்டு வகுப்பு மூலமாக அந்த பகுதி மாணவ, மாணவிகளிடம் ஏற்பட்டுள்ள மாற்றத்தையும் விவரித்தார்கள். பெற்றோர்களை மதிப்பது, இடங்களை சுத்தமாக வைத்துக் கொள்வது போன்ற பல மாற்றங்களை ஆசிரியைகள் குறிப்பிட்டார்கள்.

அதில் ஒரு பெரியவர் கூறினார். "நாங்கள் இங்கு வரும் போது உங்களை உற்சாகப்படுத்தி விட்டு செல்லலாம் என்று நினைத்துதான் வந்தோம். ஆனால் இங்கு நடக்கும் நிகழ்ச்சிகளைப் பார்க்கும் போது நாங்கள் தான் உற்சாகமாகி உள்ளோம்".

ஆம். சேவாபாரதி தமிழ்நாடு சேவா கார்யங்கள் மூலமாக பழவேற்காடு பகுதியில் அமைதியான முறையில் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டு வருவதை அந்த பெரியவர்கள் உணர்ந்து வியந்து போனார்கள்.

# சுயசார்பு பணிகள்

பொருளாதாரத்தில் ஏழ்மையில் வசிக்கும் மக்கள் தங்கள் சொந்த காலில் நிற்பதற்காக சேவாபாரதி தமிழ்நாடு பல இடங்களில் தையல் பயிற்சி மையம், கணினி பயிற்சி மையம், சுய உதவிக்குழு போன்ற திட்டங்களின் மூலம் பயிற்சிகளை அளித்து சுயசார்புள்ளவர்களாக மாற்றிட வழிகாட்டுகிறது.

## தையல் பயிற்சி மையங்கள்


மகளிர் மத்தியில் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்துவதற்கு இலவச தையல் பயிற்சி மையங்கள் பெரிதும் உதவுகின்றன. சென்னையில் அயனாவரம், வியாசர்பாடி, திருவொற்றியூர், நந்தம் பாக்கம், முடிச்சூர், பழவேற்காடு, ஒசூர் ஆகிய இடங்களில் இந்த பயிற்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இங்கு பயிற்சி பெற்ற பலர் சுயமாக சம்பாதிக்க தொடங்கியிருக்கிறார்கள். இது அவர்களின் வருமானத்தை அதிகப்படுத்தியுள்ளது.

வியாசர்பாடி சந்திரசேகர் நகரில் நடைபெற்றுவரும் தையற்பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

வந்தவாசி மாவட்டம் வெள்ளிமேடு பேட்டை தையற்பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்ற 48 மகளிர்களுக்கு மாநில துணை தலைவர் திரு.K.வேதகிரி சான்றிதழ்களை வழங்கினார். ஆர்.எஸ். எஸ்ஸின் மாவட்டத் தலைவர் திரு ராமநாதன், சேவாபாரதி மாவட்டத் தலைவர் திரு பாபு ஆகியோர் கலந்துக் கொண்டனர்.



வியாசர்பாடி சந்திரசேகர் நகர்




## கணினி பயிற்சி மையங்கள்

கிராமப்புற இளைஞர்களிடையே அடிப்படை கணிப்பொறி அறிவு அவசியம். சேவாபாரதி தமிழ்நாடு இந்த நவீன உலகிற்கு ஏற்ற வகையில் அவர்களை தயார் செய்கிறது. திருவொற்றியூர், முடிச்சூர், பழவேற்காடு, ஒசூர் ஆகிய இடங்களில் இந்த கணினி பயிற்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

## சுய உதவிக் குழுக்கள்

சமூகத்திலும் குடும்பத்திலும் பொருளாதார வளர்ச்சியில் பெண்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். அவர்களை மேம்படுத்துவதற்கான சேவாபாரதி தமிழ்நாடு சுய உதவிக் குழுக்களை நடத்தி வருகிறது. பெண்களின் திறமைகளை மேம்படுத்தி அவர்களின் வறுமையைப் போக்க உதவி புரிவதே இந்தக் குழுக்களின் நோக்கமாகும்.




*திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம் பட்டு பகுதியில் நடைபெற்று வரும் கலைமகள் சுய உதவிக் குழு.*

# ஆரோக்கியம்

## இலவச நடமாடும் மருத்துவ ஊர்தி

சென்னையில் இரண்டு இலவச நடமாடும் மருத்துவ ஊர்திகளை சேவாபாரதி தமிழ்நாடு கடந்த இரண்டு ஆண்டுகளாக இயக்கி வருகிறது. ஆங்கில மருத்துவர், நர்ஸ் ஆகிய வசதிகளுடன் இந்த ஊர்திகள் வாரந்தோறும் 24 குடிசைப் பகுதிகளுக்கு சென்று வருகிறது. தினசரி சுமார் 200 நோயாளிகள் இதன் மூலம் பயனடைகிறார்கள். கடந்த 2018 ஜூன் மாதம் வரை 1,894 முகாம்கள் நடைபெற்றுள்ளன. 73,948 நோயாளிகள் பயனடைந்துள்ளனர்.

நடமாடும் மருத்துவ குழுவின் வாராந்திர பரிசோதனை, இலவச மருந்துகள் விநியோகம், சுகாதார விழிப்புணர்வு, யோகா பயிற்சி ஆகியவற்றின் மூலம் பல பகுதிகளில் சராசரியான RBC (Red Blood Cell)






எண்ணிக்கை அதிகரித்துள்ளது. சராசரியாக சர்க்கரை அளவு குறைந்துள்ளது.

இரும்புச்சத்து மாத்திரைகள் விநியோகம் மற்றும் உணவு உட்கொள்ளும் முன் கைகளை கழுவுதல், நகங்களை வெட்டி தூய்மையாக வைத்திருத்தல் அடிப்படை சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு போன்ற நமது முயற்சி மூலமாக பள்ளி வருகைபதிவேடு கூடி உள்ளது.




*வடசென்னையில் இயங்கி வரும் நடமாடும் மருத்துவ ஊர்தியினை ஆர்.எஸ்.எஸ். அகில பாரத சஹ சேவா ப்ரமுக் ஸ்ரீ. ராஜ்குமார் மட்டலே அவர்கள் தட்டாங்குளம் பகுதியில் பார்வையிட்ட காட்சி.*

# யோகா மையம்

மனித இனத்துக்கு பாரதம் அளித்த நன்கொடை யோகா. தகுதியான யோகா ஆசிரியர்களைக் கொண்டு யோகா முகாம்களை சேவாபாரதி தமிழ்நாடு நடத்தி வருகிறது. ஆசனங்கள், பிராணாயாமம் (மூச்சு பயிற்சி), தியானம் போன்ற பயிற்சிகள் கற்றுத்தரப்படுகின்றன.

சேவாபாரதி தமிழ்நாடு மாநில தலைமை அலுவலகத்தில் ஒரு யோகாதெரபி மையம் செயல்பட்டு வருகிறது. கருவிகளின் உதவியோடு, சர்க்கரை வியாதி, ரத்தக்கொதிப்பு, முதுகு வலி, தோள் வலி, ஆஸ்துமா போன்றவற்றுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. இம் மையத்தின் ஆண்டு விழா கடந்த செப்டம்பர் 24ஆம் தேதி நடைபெற்றது. மாநில துணை தலைவர் திரு.K.வேதகிரி, மற்றும் திரு. கல்யாண் சிங் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உடல் ஆரோக்கியத்தை பற்றி எடுத்து கூறினார்கள். யோகா தெரபி மையத்தில் சிகிச்சை பெற்றுவரும் பயனாளிகள் தங்களுடைய அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர்.





இந்த யோகா பொக்கிஷத்தை கிராமம் கிராமமாக பொதுமக்களிடம் கொண்டு செல்லும் பணியையும் சேவாபாரதி மேற்கொண்டுள்ளது. சேவாபாரதியில் பயிற்சி பெற்றவர்கள் பல ஊர்களில் வாரந்தோறும் இலவச யோகா பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகின்றனர்.

# சர்வதேச யோகா தினம்

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு பல ஊர்களில் சிறப்பாக யோகா பயிற்சி அளிக்கப்பட்டன.



புரசைவாக்கம் சேவாபாரதி அலுவலகத்தில் நடைபெற்ற சர்வதேச யோகா தின நிகழ்ச்சி.



கடலூர் மாவட்டம் புவனகிரி வட்டம் சாமியார்பேட்டை அரசு மேல்நிலை பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சி.



ஒசூர் சமத்துவபுரம் அரசு உயர்நிலை பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சி.



தாம்பரம் மாவட்டம் ஒட்டேரியில் நடைபெற்ற நிகழ்ச்சி.

# நியூரோதெரபி மருத்துவம்

மும்பையைச் சேர்ந்த டாக்டர் லஜ்பத்ராய் மெஹ்ரா என்பவரால் இந்த மாற்று மருத்துவ சிகிச்சை முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நியூரோதெரபியில் நோய்களுக்கு எந்த மருந்தையும் உட்கொள்ள வேண்டியதில்லை. உடலில் உள்ள நரம்புகளைத் தூண்டுதல், நிணநீர் சுரப்பிகள் சரியாக செயல்பட வைப்பதன் மூலம் நோய்களை குணப்படுத்த முடியும் என்ற ஒரு திட்டத்தின் அடிப்படையில் இந்த மையங்கள் செயல்படுகின்றன. சென்னையில் கோடம்பாக்கம், பெரம்பூர், திருவொற்றியூர் (2 மையங்கள்), குரோம்பேட்டை, அம்பத்தூர், ஆகிய இடங்களில் இந்த மையங்கள் செயல்படுகின்றன.

திருவொற்றியூர் நியூரோதெரபி மையத்தில் பேஸ்மேக்கர் கருவி பொருத்த வேண்டிய அளவிற்கு இதய வால்வுகள் பாதிக்கப்பட்டிருந்த திரு.தேவசி என்பவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு முழுமையாக குணமடைந்துள்ளார். நியூரோதெரபி மையத்தை பாராட்டி இது சம்பந்தமாக அவர் கடிதம் எழுதியுள்ளார். இது நியூரோதெரபியின் சமீபத்திய சாதனையாகும்.



# ஹோமியோ முதலுதவி மையங்கள்

குக்கிராமங்களில் அவசர மருத்துவ உதவிக்காக பயிற்சி பெற்ற தொண்டர்கள் மூலமாக ஹோமியோ முதலுதவி மையங்களை செயல்படுத்தி வருகிறோம்.



# சிவராம்ஜி ரத்த வங்கி

சேலத்தில் கடந்த 15 ஆண்டுகளாக சிவராம்ஜி ரத்த வங்கி என்ற லாப நோக்கமற்ற ரத்த வங்கி செயல்பட்டு வருகிறது. சேலம் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள முக்கிய ரத்த வங்கிகளில் இதுவும் ஒன்று.

உலகிலேயே மிகவும் அரிதான ரத்த வகை 'ஒ பாம்பே பாசிடிவ்'. சிவராம்ஜி ரத்தவங்கியை சேர்ந்த ஒருவர் இந்த வகை அரிய ரத்தத்தை தானம் செய்வதற்காக பங்களாதேஷ் சென்று வந்தது குறிப்பிடத்தக்க சம்பவமாகும்.

# ரத்த தான இயக்கம்

சேலம் சிவராம்ஜி ரத்த வங்கியும், தர்மபுரி சிக்மா பயிற்சி மையம் இணைந்து ஆகஸ்ட் 15 அன்று நடத்திய ரத்த தான முகாம்.

சேவாபாரதி ஒசூர், ஒசூர் ரோட்டரி கிளப்



ஆகியவை இணைந்து ஒசூர் ஸ்ரீ சாரதா நிகேதன் அன்பு இல்லத்தில் நடைபெற்ற ரத்ததான முகாம். சேவாபாரதி ஒசூர் அறக்கட்டளையின் அறங்காவலர் திரு. அன்னையப்பா, சேவாபாரதி கிருஷ்ணகிரி மாவட்ட துணை தலைவர் திரு. ரவிசங்கர், ரோட்டரி சங்க நகர் பொறுப்பாளர் திரு. ராஜா ஆகியோர் கலந்துக்கொண்டனர். முகாமில் 80 க்கும் மேற்பட்டவர்கள் ரத்த தானம் செய்தனர்.



## மருத்துவ முகாம்கள்

சென்னையில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பெய்த மழையால் பல தாழ்வான பகுதிகளில் மழை நீர் புகுந்தது. இதை



தொடர்ந்து பலருக்கு தொற்று நோய்கள் ஏற்பட துவங்கின. சேவாபாரதி தமிழ்நாடு உடனடியாக போரூர், மேடவாக்கம், மடுவங்கரை, பெரம்பூர், ரெட்டேரி போன்ற பகுதிகளில் முகாம்கள் நடத்தி மருத்துவ உதவிகள் அளிக்கப்பட்டன.




## நிலவேம்பு கசாயம் வழங்குதல்

அத்துடன் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிலவேம்பு கசாயமும் வழங்கப்பட்டது.

சென்னை அரும்பாக்கத்தில் நிலவேம்பு கசாயம் வழங்கப்பட்ட காட்சி.




மழையால் பாதிக்கப்பட்ட ஆம்பூர் மக்களுக்கு சேவாபாரதி மற்றும் சமயவல்லி தாயார்அன்புஇல்லம்சார்பாகநவம்பர்9ஆம் தேதி நிலவேம்பு கசாயம் வழங்கப்பட்டது. அன்பு இல்ல பொறுப்பாளர்கள் திரு. சூரியமூர்த்தி, திரு.ஞானகிரி முதலியோர் கலந்துக்கொண்டனர்.



# சமுதாய நலன்

## அன்பு இல்லங்கள்

சமுதாயத்தில் கைவிடப்பட்ட குழந்தைகளை நாம் அனாதைகள் என்று எண்ணுவதில்லை. அவர்களும் நமது சகோதர சகோதரிகள் தான். அவர்களுக்கு தேவை, ஆத்மார்த்தமான அன்பு. அது கொடுக்கின்ற இடம் தான் அன்பு இல்லங்கள்.

சென்னையில் சக்தி அன்பு இல்லம், ஆம்பூரில் ஸ்ரீ சமயவல்லி தாயார் அன்பு இல்லம், ஒசூரில் ஸ்ரீ நிவேதிதா நிகேதன் மற்றும் ஸ்ரீ சாரதா நிகேதன் என நான்கு அன்பு இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. இங்கு குழந்தைகளுக்கு உணவு, உறைவிடம், உடை போன்ற அத்தியாவசிய வசதிகள் அளிக்கப்படுகின்றன. குழந்தைகள் பள்ளிப் படிப்புடன் நின்று விடாமல், அவர்கள் உயர்கல்வி பெறுவதற்கும் உதவிகள் செய்யப்படுகிறது. மேலும், கல்வி கற்று முடித்ததும் அவர்கள் திருமணம் செய்வதற்கும் ஆதரவு கரம் நீட்டப்படுகிறது.

அன்பு இல்லங்கள் சிறப்பாக நடைபெற அன்பு இல்ல பொறுப்பாளர்களின் சந்திப்பு வருடந்தோறும் நடைபெற்று வருகிறது. இந்தாண்டு அந்த சந்திப்பு ஒசூர் ஸ்ரீ சாரதா நிகேதன் அன்பு இல்லத்தில் நடைபெற்றது. நான்கு அன்பு இல்லங்களிலிருந்து 32 பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



சாரதா நிகேதன், ஒசூர்


நிவேதிதா நிகேதன், ஒசூர்


ஆம்பூர்



சென்னை

# திருவிளக்கு பூஜைகள்

கோவில்களில் பாரம்பரியமாக நடை பெற்றுவரும் திருவிளக்கு பூஜைகளை சேவாபாரதி சமுதாயத்தில் நல்லிணக் கத்தை ஏற்படுத்தும் நிகழ்ச்சியாக நடத்தி வருகிறது. இதன் மூலம் கிராமங்களில் ஏற்றதாழ்வுகள் நீங்கி அனைவரும் ஒன்றே என்ற கருத்தை உருவாக்கும் முயற்சியில் சேவாபாரதி ஈடுபட்டு வருகிறது. இந்த திருவிளக்கு பூஜைகள் மூலமாக பிளவுபட்டு இருந்த சமுதாயம் ஒன்றுபட்ட சமுதாயமாக மாறிய உதாரணங்கள் பல உள்ளன.



பண்ருட்டி வட்டம் உறையூரில் நடைபெற்ற திருவிளக்கு பூஜை.



திருவள்ளூர் மாவட்டம் குருராஜ பேட்டையில் நடைபெற்ற திருவிளக்கு பூஜை.



கொளத்தூரில் நடைபெற்ற திருவிளக்கு பூஜை.

# நடமாடும் நூலகம்

நடமாடும் நூலகங்கள் மூலம் ஆன்மிகம், பண்பாடு, வரலாறு, தேசியம் தொடர்பான சிறிய, சிறிய புத்தகங்கள்




சுற்றுக்கு விடப்படுகிறது. இதன் மூலம் மாணவர்களின் உலக பொது அறிவு நன்கு வளர்ச்சி அடைகிறது.

# சிறார் சிறுசேமிப்புக் குழு

தொடர்ந்து சேமித்தல், கவனமாக செலவழித்தல் என்ற நன்னெறியில் சேவாபாரதி தமிழ்நாடு நம்பிக்கை கொண்டுள்ளது. குழந்தைகளிடையே இளம் வயதிலேயே சேமிக்கும் பழக்கத்தை விதைக்கும் நோக்கில் சிறார் சிறு சேமிப்புத் திட்டங்கள்

அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு குழந்தைக்கும் தனியாக கணக்கு புத்தகம் அளிக்கப்பட்டு, வாரம் தோறும் சிறிய தொகையை செலுத்துவது ஊக்குவிக்கப்படுகிறது. அந்தப்பணம் குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு திருப்பியளிக்கப்பட்டு, அவர்களது கல்விச் செலவுகளுக்குப் பயன்படுத்த ஊக்குவிக்கப்படுகிறது.

## மகிளா மண்டலி

அனைவருக்கும் கல்வி, ஆரோக்கியம், தூய்மை, பெண்கள் சுய முன்னேற்றம், சமுதாய உணர்வு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவது தான் மகிளா மண்டலியின் நோக்கமாகும். அந்த பகுதியைச் சேர்ந்த பெண்கள் வாரம் ஒரு முறை சந்தித்து இதைப் பற்றிய கருத்துக்களைப் பரிமாறி கொள்வதே மகிளா மண்டலியின் செயல் திட்டமாகும்.




ஒசூர், சென்னை வியாசர்பாடி, திருவொற்றியூர் போன்ற இடங்களில் இக்குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.

## முப்பெரும் விழா

சுதந்திர தின விழா, பாரதமாதா பூஜை, ரக்ஷாபந்தன் ஆகியவை இணைத்து முப்பெரும் விழாவாக சேவாபாரதி தமிழ்நாடு சார்பாக கொண்டாடப்படுகிறது.




பாரதத்தின் விடுதலைக்காக போரிட்ட சுதந்திர போராட்ட வீரர்களின் வரலாறு, அவர்களின் தியாகம் ஆகியவற்றை நினைவு கொள்ளுதல், சமுதாயத்தில் நல்லிணக்கம் கொண்டு வருவதற்காக ரக்ஷாபந்தன் ஆகிய விழாக்களை நடத்தி வருகிறோம். தாம்பரம் சானடோரியத்தில் நடைபெற்ற விழா.

## சேவா தினம்

சேவாபாரதி தமிழ்நாடு ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 2ஆம் தேதியை சேவா தினமாக கடைபிடித்து வருகிறது. பிளாஸ்டிக் இல்லாத கிராமம், நீர்நிலைகளைச் சுத்தம் செய்தல், தூய்மை பாரதம் போன்ற சேவைப் பணிகள் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர் வூட்டி, அவர்களையும் இணைத்து சேவைப்பணிகள் நடைபெற்று வருகின்றன.



சேலம் மாவட்டம் ஆத்தூர் பேருந்து நிலையத்தை சுத்தம் செய்யும் காட்சி.



சேலத்தில் மரக்கன்றுகள் நடும் காட்சி.



தர்மபுரி மாவட்டம் காரிமங்கலத்தில் சேவா பாரதி தமிழ்நாடு மற்றும் சிக்மா டியூசன் சென்டர் இணைந்து மரக்கன்றுகள் நடப்படும் காட்சி.


கால்கள் செயலற்ற நிலையில் உள்ள மாற்றுதிறனாளி வேளச்சேரியைச் சேர்ந்த பாபு என்பவருக்கு ஜூலை 22 ஆம் தேதி வாக்கர் (walker) வழங்கப்பட்டது.



# தாம்பரம் ரயில் நிலையம் தூய்மை

சேவாபாரதி தமிழ்நாடு தாம்பரம் பகுதி சார்பாக ஒவ்வொரு மாதமும் இரண்டாவது வியாழக்கிழமை தாம்பரம் ரயில் நிலையத்தை தூய்மைப்படுத்தும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ரயில் நிலையத்தை தூய்மை செய்தபின், ரயில் நிலையத்திற்கு வரும் பயணிகள், ரயில்வே நிலைய பணியாளர்கள், பொதுமக்கள் என பலரை சந்தித்து தூய்மை பாரதம் குறித்து விழிப்புணர்வு பிரச்சாரமும் மேற்கொண்டு வருகின்றனர்.

# ரயில்வே துறை வழங்கியுள்ள பாராட்டுகடிதம்



SOUTHERN RAILWAY

No. 35/TBM/STN
From Chief Health Inspector
Tambaram Railway Station

Date : 09.11.2017

TO WHOM SO EVER IT MAY CONCERN

We appreciate the services rendered by Volunteers of SEVABARATHY TAMILNADU TAMBARAM CENTER for creating cleanliness awareness through Swatch Bharat drive at Tambaram Railway Station along with Railway Staff during the year 2017.

We hope that the co-operation will be rendered in future also.

We wish SEVABARATHI TAMIL NADU all the very best in its endeavour.

CHIEF HEALTH INSPECTOR
TAMBARAM RAILWAY STATION
SOUTHERN RAILWAY

# சேவை பண்பு பயிற்சி முகாம்கள்

தன்னார்வலர்கள் சேவை பணிகளை சிறப்பாகவும், தாய் உள்ளத்துடன் செய்யவும் அவர்களுக்கு சேவை பண்பு பயிற்சி முகாம்களை சேவாபாரதி தமிழ்நாடு நடத்தி வருகிறது. மகளிர்களுக்காக டிசம்பர் மாதத்தில் மூன்று நாட்களும், மே மாதத்தில் பத்து நாட்களும் ஆண்களுக்காக மே மாதத்தில் மூன்று நாட்களும் முகாம்கள் நடைபெற்று வருகின்றன.

## மூன்று நாட்கள் மகளிர் முகாம்



இந்தாண்டு டிசம்பர் மாதம் மகளிருக்கான மூன்று நாள் சேவைப் பண்பு பயிற்சி முகாம் ஒசூர், பாலக்கோடு, பண்ருட்டி, சத்யமங்கலம் (திருவண்ணாமலை), திருப்பத்தூர், திருத்தணி, அம்பத்தூர் மற்றும் முடிச்சூர் (தாம்பரம்) ஆகிய எட்டு இடங்களில் நடைபெற்றது. மொத்தம் 346 பயிற்சி பெறுபவர்களும் 104 பயிற்சியாளர்களும், ஏற்பாட்டாளர்களும் சேர்ந்து 450 மகளிர்கள் கலந்து கொண்டனர்.





# பத்து நாட்கள் மகளிர் முகாம்

பத்து நாட்கள் மகளிர் சேவைப் பண்பு பயிற்சி முகாம் மே10 முதல் மே 20 வரை பெரம்பூர் விவேகானந்தா வித்யாலயாவில் நடைபெற்றது. துவக்க நிகழ்ச்சியில் ஆர். எஸ்.எஸ்ஸின் தென்பாரத தலைவரும் சேவாபாரதி தமிழ்நாடு அறக்கட்டளையின் அறங்காவலருமான திரு R.வன்னியராஜன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். முகாமிற்கு 91 பயிற்சி பெறுபவர்கள் 33 பயிற்சி அளிப்பவர்கள், பொறுப்பாளர்கள்




4 ஆக மொத்தம் 128 மகளிர்கள் கலந்துக் கொண்டனர். முகாமில் இளம்பெண்கள் தாய்மார்களுக்கு பாதபூஜை செய்யும் நிகழ்ச்சியும், தாய்மார்களின் அம்மாசோறு நிகழ்ச்சியும் கலந்துக் கொண்டவர்களுக்கு மிகந்த உற்சாகத்தை அளித்தது.



உள்ளூர் முக்கியஸ்தர்களைக் கொண்டு ஒரு முகாம் வரவேற்பு குழு அமைக்கப்பட்டது. முகாம் சிறப்பாக நடைபெற வரவேற்பு குழு உறுப்பினர்கள் பெரிதும் உதவி செய்தனர்.










## ஆண்கள் முகாம்



ஆண்களுக்கான சேவை பண்பு பயிற்சி முகாம் மே 25, 26, 27 தேதிகளில் வேலூரில் உள்ள BMD ஜெயின் பள்ளியில் நடைபெற்றது. 25 பேர் கலந்துக்கொண்டு பயிற்சி பெற்றனர்.

## நியூரோதெரபி முகாம்

பத்து நாட்கள் நியூரோதெரபி சிறப்பு பயிற்சி வகுப்பு கடந்த ஜூன் மாதம்



புரசைவாக்கம் சேவாபாரதி தமிழ்நாடு தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. 100 பேர் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். மாநில தலைவர் திரு. B.ரபு மனோகர் சிறப்புரையாற்றும் காட்சி. அருகில் சேவாபாரதி தமிழ்நாடு பொருளாளரும் நியூரோதெரபி பொறுப்பாளருமான திருமதி. S. பிரேமா மோகன்.

## முழுநேர ஊழியர்கள் மாதாந்திர சந்திப்பு


சேவைப் பணிகள் இன்னும் பல பகுதிகளுக்கு கொண்டு செல்வதற்காக சேவாபாரதியில் ஏழு முழுநேர



ஊழியர்கள் பணியாற்றி வருகிறார்கள். அவர்களின் திறமையை மேம்படுத்த மாதந்தோறும் பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. ஒரு மாதாந்திர சந்திப்பில் அவர்களுக்கு குடும்ப நல பிரார்த்தனை செய்வது பற்றி பயிலரங்கம் நடைபெற்றது.

# துறவிகள் யாத்திரை

சென்னையில் குடிசைப் பகுதி மக்களிடையே சமுதாய நல்லிணக்கத்தை பேணுவதற்காக தமிழ் புத்தாண்டு அன்று துறவிகள் யாத்திரையை சேவாபாரதி தமிழ்நாடு நடத்தி வருகிறது. துறவிகள் ஒவ்வொரு வீடாக சென்று விளக்கேற்றி சமுதாயத்தில் அனைவரும் இணைந்து





நல்லிணக்கத்துடன் வாழ அறிவுரைகளை கூறி ஆசிர்வாதம் செய்து வருகின்றனர்.

இந்தாண்டு ஸ்ரீ ராமானந்தா சுவாமிகள், ஸ்ரீ யுக்தேஸ்வரானந்தா சுவாமிகள், ஸ்ரீ ஈஸ்வரானந்தா சுவாமிகள், சாம்ப சிவ பிரியா அம்மா சுவாமிகள், யதீஸ்வரி சாம்பசிவ அம்மா சுவாமிகள், உட்பட 45 துறவிகள் 87 பகுதிகளுக்கு சென்று ஆசியுரை வழங்கினார்கள்.









பெரம்பூர் அருந்ததி நகரில் கடந்த ஆண்டு துறவிகள் யாத்திரை நடைபெற்றபோது ஒரு 30 வயது திருமணமாகாத பெண், துறவியரை பார்த்து 'எங்கள் வீட்டுக்குள் வரவேண்டாம் வீடு இடிந்து விழும் சூழ்நிலை இருக்கிறது ஆகையால் தாங்கள் வெளியில் இருந்தே ஆசீர்வதியுங்கள்' என்றார். ஆனால் துறவி "பயப்படாதே நான் உங்கள் வீட்டில் வந்து விளக்கேற்றுகிறேன் அடுத்த ஆண்டுக்குள் உனக்கு திருமணம் ஆகிவிடும். வீடும் கட்டிக் கொள்வாய்" என வீட்டில் விளக்கேற்றி ஆசீர்வதித்தார். இந்த ஆண்டு துறவிகள் யாத்திரை சமயத்தில் அவர் துறவிகளை மகிழ்ச்சியுடன் வரவேற்றார். என்ன ஆச்சரியம். அவருக்கு திருமணமாகி கர்ப்பமாக உள்ளார். மேலும் புது வீடும் கட்டி விட்டார். அவரது வீட்டில்தான் அனைவருக்கும் அன்று மதிய உணவு. இதைப் போல இன்னும் நெகிழ்வு தரக்கூடிய சம்பவங்கள் பல நடைபெற்று உள்ளன.

நிகழ்ச்சியில் ஆர்.எஸ்.எஸ். தென் பாரத தலைவர் திரு.R.வன்னியராஜன், மற்றும் பொறுப்பாளர்கள் திரு.ஸ்தாணுமாலயன், திரு.சண்முகநாதன், திரு.K.குமாரசாமி, திரு.V.G.ஜெகதீசன், திரு.பூ.மு.ரவிக்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர். ஒவ்வொரு வீட்டிற்கும் மாரியம்மன் படமும், குல தெய்வ வழிபாடு என்ற புத்தகமும் வழங்கப்பட்டன.



ஈரோட்டில் மாநில துணை தலைவர் திரு. ஐயப்பன், ஈரோடு மாவட்ட செயலாளர் திரு. திருமூர்த்தி ஆகியோர் ஈரோட்டில் உள்ள குடிசை பகுதியில் வசிக்கும் மக்களுக்கு மாரியம்மன் படமும் குலதெய்வ வழிபாடு புத்தகமும் வழங்கி புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

# சேவா சங்கமம்

சமுதாயத்தில் பணியாற்றும் பல்வேறு சேவை அமைப்புகளை ஒன்றிணைத்து அவர்களிடையே பரஸ்பர இணக்கத்தை உருவாக்கும் நோக்கில் 'சேவா சங்கமம்' என்ற நிகழ்ச்சி கடந்த செப்டம்பர் 16, 17 தேதிகளில் சென்னை கொரட்டூர்




டாக்டர் நல்லி குப்புசாமி விவேகானந்தா வித்யாலயாவில் நடைபெற்றது. இந்த சங்கமத்தில் 136 சேவை அமைப்புகளின் சார்பாக 232 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியை புதுச்சேரி துணைநிலை ஆளுநர் கிரண்பேடி குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார். சென்னை ஸ்ரீ




ராமகிருஷ்ணா மடத்தின் மேலாளர் சுவாமி விமூர்த்தானந்தாஜி மகராஜ், ஆர்.எஸ்.எஸ். அகில பாரத சேவா பிரமுக் திரு.பராக் அப்யங்கர், ராஷ்ட்ரிய சேவாபாரதியின் அகில இந்திய பொதுச் செயலாளர் திரு. ரிஷிபால் தட்வால், ராஷ்ட்ரிய சேவாபாரதியின் சுய உதவிக் குழு பொறுப்பாளர் திரு. சுந்தர லட்சுமணன், ஆர்.எஸ்.எஸ் தென் பாரத தலைவர் திரு. R. வன்னியராஜன், திரு. சாம்பமூர்த்தி, திரு. V.G.ஜெகதீசன், திரு. பூ.மு. ரவிக்குமார், சேவாபாரதி தமிழ்நாடு மாநிலத் தலைவர் திரு. B.ரபு மனோகர் ஆகியோர் கலந்துக் கொண்டு சிறப்புரையாற்றினார்கள். சேவா சங்கமம் வரவேற்புக்குழு தலைவரும், பியூர் கெமிக்கல்ஸ் இந்தியா பிரைவேட்





லிமிடெட் நிறுவனத்தின் தலைவருமான திரு. M.பொன்னுசாமி நிகழ்ச்சிக்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

பாஜக மாநிலங்களவை உறுப்பினர் திரு. இல.கணேசன், திரு. கேசவ வினாயகன், ஆர்.எஸ்.எஸ்ஸின் மாநில மக்கள் தொடர்பு இணை பொறுப்பாளர் திரு. ராம ராஜசேகர், சேவாபாரதி தமிழ்நாடு முன்னாள் மாநில தலைவர் திரு. துரைசங்கர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதனையடுத்து, பள்ளி வளாகத்தி லேயே அமைக்கப்பட்டிருந்த பல்வேறு சேவை அமைப்புகளின் கண்காட்சியை பங்கேற்பாளர்கள் அனைவரும் பார்வையிட்டனர். அமர்வில் அரசின் நலத்திட்டங்கள் குறித்து விளக்கும் நிகழ்ச்சியும், வருமானவரி அலுவலக நடைமுறை சம்பந்தமான கேள்விகளுக்கு பட்டயக் கணக்காளர்களான திரு. சத்தியநாராயணாவும், திரு. கோபாலகிருஷ்ண ராஜூவும் விளக்கம் அளித்தார்கள்.

## சேவை மையங்கள்

ஒரு குறிப்பிட்ட இடத்தை மையமாக கொண்டு அங்கு பல சேவைப் பணிகளை செயல்படுத்திட, சேவை மையங்களை சேவாபாரதி தமிழ்நாடு உருவாக்கி வருகிறது. சென்னை திருவான்மியூரில் பாரதி சேவை மையம், திருவொற்றியூரில் சிவராம்ஜி சேவை மையம், தாம்பரம் முடிச்சூரில் பாரதமாதா சேவை மையம், சென்னை அயனாவரத்தில் நிவேதிதா சேவை மையம் ஆகியவை சில உதாரணங்கள்.

## பாரதி சேவை மையம்

சென்னை திருவான்மியூர் லட்சுமி நகரில் கடந்த 17 ஆண்டுகளாக செயல்பட்டுவரும் பாரதி சேவை மையம் அந்தப் பகுதியின் நம்பிக்கை நட்சத்திரமாக உருவெடுத்துள்ளது. பல பட்டதாரிகளை உருவாக்கி வருகிறது.



கல்விதான மையம் பண்பாட்டு வகுப்பு, திருவிளக்கு பூஜை, மங்கள பிரார்த்தனை, குடும்ப கூட்டு பிரார்த்தனை, மகளிர் சுய உதவிக்குழு, நடமாடும் நூலகம், பஜனை, யோகா, சிறார் சேமிப்புக் குழு முதலிய பத்து விதமான சேவா கார்யங்கள் அந்த மையத்தில் நடைபெற்று வருகின்றன. இந்த சேவை மையத்தை சேவாபாரதி முழுநேர ஊழியர்கள் டிசம்பர் 7ஆம் தேதி அன்று பார்வையிட்டு அந்த மையத்தின் மூலம் சமுதாயத்தில் ஏற்பட்ட தாக்கத்தை அறிந்துக் கொண்டனர்.

# இந்து ஆன்மீக மற்றும் சேவை கண்காட்சி

இந்தாண்டு சென்னை வேளச்சேரி குருநானக் கலைக் கல்லூரியில் நடைப்பெற்ற இந்து ஆன்மீக மற்றும் சேவை கண்காட்சியில் வழக்கம்போல சேவாபாரதி தமிழ்நாடு அரங்கமும் இடம்பெற்றிருந்தது. கடந்த ஆண்டு நடைபெற்ற சேவை நிகழ்ச்சிகளின் கண்காட்சி இடம் பெற்றிருந்தது. பூஜனிய சுவாமி ஓம்காரனந்தா, திரு. ஹெச். ராஜா உட்பட பல முக்கியஸ்தர்கள் நமது அரங்கிற்கு வருகை தந்து நமது சேவை காட்சிகளைக் கண்டு களித்தனர். அரங்கத்திற்கு வந்த அனைவருக்கும் சேவைப்பணியில் ஈடுபடவேண்டி 'உங்களைத் தான் தேடுகிறோம்' என்ற துண்டு பிரசுரம் விநியோகம் செய்யப்பட்டது. அந்த பிரசுரத்தை படித்த பலர் தங்கள் பெயர்களை பதிவுசெய்து சேவைப்பணியில் ஈடுபட விருப்பம் தெரிவித்தனர். அவர்களை சேவைப் பணியில் ஈடுபடுத்த முயற்சியும் நடைபெற்று வருகிறது.







# ஆனந்த சங்கமம்

சேவாபாரதி தமிழ்நாடு சார்பாக சேவாபாரதியின் பல்வேறு சேவைப் பணிகளை சென்னை வாழ் பெரியோர்கள் அறிந்துக் கொள்ள 'அறிந்து கொள்ள... ஆனந்தம் அடைய...' என்கிற நிகழ்ச்சி



மார்ச் 17ஆம் தேதி நடைப்பெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சாசன தணிக்கையாளர் திருமதி நளினி பத்மநாபன், கங்கா பவுண் டேசன் பிரைவேட் லிமிடெட் நிர்வாக இயக்குனர் திரு. S.செந்தில்குமார், இந்திய செஞ்சிலுவை சங்கம், தமிழ்நாடு கிளை துணைத் தலைவர் திரு.D.வடிவேல் முகுந்தன், ஆர்.எஸ்.எஸ்ஸின் வடதமிழக




தலைவர் டாக்டர் K.குமாரசாமி ஆகியோர் கலந்துக் கொண்டு பேசினர். இந்நிகழ்ச்சியில் சேவாபாரதியின் சேவை பணிகள் காணொளியாக (Video) வெளியிடப்பட்டது. அந்த காணொளியை யூ-டியூப் இணையதளத்தில் Sevabharathi Tamilnadu service activities 2018 என்ற இணைப்பில் காணலாம்.





## அமைப்பு வளர்ச்சி மற்றும் திட்ட மேலாண்மை பயிலரங்கம்

ராஷ்ட்ரிய சேவாபாரதி சார்பாக 'அமைப்பு வளர்ச்சி மற்றும் திட்ட மேலாண்மை' (Organisation Development and Project Management) குறித்த பயிலரங்கம் நவம்பர் 25, 26 தேதிகளில் சென்னை சிட்லபாக்கம் விவேகானந்தா வித்யாலயாவில் நடைபெற்றது. தமிழ்நாடு மற்றும் கேரளாவில் இருந்து 40 பொறுப்பாளர்கள் கலந்துக்கொண்டு பயிற்சி பெற்றனர். ராஷ்ட்ரிய சேவாபாரதியின் அகில பாரத துணைதலைவர் திரு. PEB மேனன், யூத் பார் சேவா அமைப்பின் அகில பாரத ஒருங்கிணைப்பாளர் திரு. வெங்கடேஷ்மூர்த்தி, திரு. சுந்தரலட்சுமணன், திரு. பத்மகுமார் ஆகியோர் கலந்துக் கொண்டு வழிகாட்டினார்கள்.

# பேரிடர் மேலாண்மை

## ஓக்கி புயல் நிவாரண உதவி




கன்னியாகுமரி மாவட்டம் ஓக்கி புயலால் பாதிக்கப்பட்டபோது சேவாபாரதி தமிழ்நாடு சார்பாக பிளாஸ்டிக் பாய்கள், கொசுவர்த்தி சுருள், மெழுகு வர்த்தி போன்ற நிவாரண பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் திரு.கல்யாண்சிங், சேவாபாரதி மாநிலத் தலைவர் திரு.B.ரபு மனோகர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் சேவாபாரதி தமிழ்நாடு சார்பாக நிவாரண பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டன. அந்த நிகழ்ச்சியில் சேவாபாரதி தமிழ்நாடு மாநில செயலாளர் திருமதி. J.C இந்துமதி, மாவட்ட துணை தலைவர் திரு. ரவிசங்கர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.






You are welcome to join hands in this noble service in any manner you feel fit.
Donations to Sevabharathi are eligible for Tax exemption under section 80G of Income Tax Act.
You can donate through cheque, net transfer. Please furnish your name, full address, mobile number, PAN number to our office after net transfer.

**Account Name : Sevabharathi Tamilnadu**
**Account Number : 078411100002661**
**Bank : Andhra Bank**
**Branch : Chetpet**
**Account Type : Current Account**
**IFSC Code: ANDB0000784**



# சேவைப் பணிகள் - ஓர் பார்வை

12 அரசு மாவட்டங்கள்

2,500 தன்னார்வலர்கள்

19 வகையான சேவைகள்

645 சேவைப் பணிகள்

சராசரி பயனாளிகள் தினசரி 6,000

கல்விப் பணிகள் 318

சமுதாய நலப்பணிகள் 141

மருத்துவப் பணிகள் 145

பொருளாதார சுயசார்பு பணிகள் 41

எண்ணற்ற பேரிடர் நிவாரண பணிகள்